# INVITATION



தமிழ்க்கூடல் நிகழ்விற்கான அழைப்பிதழ் :-

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி, மதுரை

இணைந்து நடத்தும்

தமிழ்க்கூடல் - 133

அழைப்பிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசி - 03

நாள்: 19.09.2024 (வியாழன்) நேரம்: முற்பகல் 10.30 மணி

வரவேற்புரை

முனைவர் சு. சோமசுந்தரி அவர்கள்

ஆய்வறிஞர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

தலைமை

முனைவர் ஔவை ந. அருள் அவர்கள்

இயக்குநர் (மு.கூ.பொ), உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

முன்னிலையுரை

திருமதி மோ. கவிதா அவர்கள்

முதல்வர் (பொ), இயற்பியல் துறைத் தலைவர்,

சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி, மதுரை

தமிழ்க்கூடலுரை

'சங்க இலக்கியத்தில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல்'

திருமதி புனிதா பாண்டியராஜ் அவர்கள்

எழுத்தாளர், பட்டிமன்றப் பேச்சாளர், அருப்புக்கோட்டை

நன்றியுரை

முனைவர் ஜ. ஜான்சிராணி அவர்கள்

ஆய்வு வளமையர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

நிகழிடம் : கூட்ட அரங்கம், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

அனைவரும் வருக! [illegible] தேன்தமிழ் பருக!

PHOTOS




பத்திரிகைச் செய்தி புகைப்படம்:-

# உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்க் கூடல் கருத்தரங்கம்

மதுரை, செப். 19: மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், சேர்மத்தாய் வாசன்
மகளிர் கல்லூரி சார்பில், தமிழ்ச் சங்கத்தின் பெருந்திட்ட வளாக
கூட்டரங்கத்தில் தமிழ்க் கூடல் கருத்தரங்கம் வியாழக்கிழமை
நடைபெற்றது.

உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொறுப்பு) முனைவர் ஔவை
ந. அருள் தலைமை வகித்தார். சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி
முதல்வர் மோ.கவிதா முன்னிலை வகித்தார்.

எழுத்தாளர் புனிதா பாண்டிராஜ் சிறப்பு அழைப்பாளராகப் பங்
கேற்று, சங்க கால குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் என்ற தலைப்
பில் பேசினார். அப்போது, குறிஞ்சி நில மக்களின் ஏற்றத்தாழ்வுக
ளற்ற வாழ்க்கை முறை, கடைப்பிடித்த பகுத்துண்ணும் பழக்கம்,
குறிஞ்சி நிலத் தலைவனின் வீரம் ஆகியன குறித்த சங்க இலக்கியக்
குறிப்புகளை அவர் விளக்கிப் பேசினார்.

சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி மாணவர்கள், தமிழறிஞர்
கள், பேராசிரியர்கள், உலகத் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், கவிஞர்
கள் கலந்து கொண்டனர்.

உலகத் தமிழ்ச் சங்க ஆய்வு ஆய்வறிஞர் முனைவர் சு.சோமசுந்தரி
வரவேற்றார். ஆய்வு வளமையர் ஜ. ஜான்சிராணி நன்றி கூறினார்.

# REPORT

நாடார் மகாஜன சங்கம்

சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி, மதுரை.12.

தமிழ்த்துறை முத்தமிழ் மன்றம் - அறிக்கை 2024 - 2025

உலகத் தமிழ்ச் சங்கம் - தமிழ்க்கூடல் 133வது நிகழ்வு (19.09.2024)

உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் நாடார் மகாஜன சங்கம் சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி சார்பில், 19.09.2024 அன்று காலை 10.30 மணி அளவில் உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்க்கூடல் 133 வது நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே தொடங்கியது. இந்நிகழ்விற்கு உலகத் தமிழ்ச்சங்க இயக்குனர் (பொறுப்பு) முனைவர். ஔவை. ந.அருள் அவர்கள் தலைமை வகித்தார். ஆய்வறிஞர் முனைவர்.சு. சோமசுந்தரி அவர்கள் சிறப்பானதொரு வரவேற்புரையை வழங்கினார். நமது கல்லூரி முதல்வர் திருமதி.மோ.கவிதா அவர்கள் முன்னிலை வகித்து, "பழமைக்கு பழமையாய் புதுமைக்கு புதுமையாய் பட்டொளி வீசிடும் தமிழ் மொழியினையும் அதன் வளர்ச்சிக்காக தொண்டாற்றும் உலகத் தமிழ்ச் சங்கம் குறித்தும் பாராட்டி" முன்னிலையுரையாற்றினார்.

இவ்விழாவின் சிறப்புரையாக பட்டிமன்றப் பேச்சாளரும் எழுத்தாளருமான திருமதி.புனிதா பாக்யராஜ் அவர்கள், "சங்க இலக்கியத்தில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல்" எனும் தலைப்பில், "அகம், புறம் எனும் திணைப் பகுப்புடைய சங்க இலக்கியங்களில் குறிஞ்சித் திணையே உயிரும் பயிரும் வளர்வதற்கும் ஒழுக்கம் நிலவுவதற்கும் நாகரிக பண்பாடுகள் வளர்வதற்கும் நிலமே மூலதனமாக அமைவதால் குறிஞ்சி நிலத்தை முதன்மைத் திணையாக வகுத்துள்ளனர் என்று கூறினார். இயற்கையோடு இயைந்த சங்க கால மக்களின் வாழ்வியல் சூழலை எளிய சொற்களுடன் கதையாடல் நிகழ்வு போன்று முதல்,கரு, உரிப்பொருள்களை மையமாகக் கொண்டு" சிறப்பாக எடுத்துக்கூறி சிறப்புரையாற்றினார். மேலும், மாணவிகள் மற்றும் ஆய்வறிஞர்கள் எழுப்பிய ஐய வினாக்களுக்கும் விடையளித்து சிறப்பித்தார்.

இவ்விழாவின் நிறைவாக இனியதொரு நன்றியுரையை ஆய்வு வளமையர். முனைவர்.ஜ.ஜான்சிராணி அவர்கள் வழங்கினார். இக்கருத்தரங்கில் தமிழ்த்தறையில் பயிலும் 42 மாணவிகள் கலந்து கொண்டு இயற்கையோடு இயைந்த குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் குறித்தும் அறிந்து கொண்டனர். மேலும், இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவிகளுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது.

தமிழ்த்துறைத்தலைவர் கையொப்பம்

கல்லூரி முதல்வர் கையொப்பம்